# Salve Regina

**Society of St. Pius X**, Palayamkottai.
Tel:0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com

**பெப்ரவரி 2007 மலர்: 2 இதழ்: 2**
**(தனிச்சுற்றுக்கு மட்டும்)**


# அர்ச். கன்னிமரியாயின் சுத்திகரம்!

**"மோயிசனுடைய நியாயப்பிரமாணத்தின்படி அவளுடைய சுத்திகர நாட்கள் நிறைவேறின போது அவரை ஜெருசலேமுக்கு கொண்டு போனார்கள்"** (லூக். 2:22)

சேசுவில் அன்பார்ந்த விசுவாசிகளே, தாயாகியத் திருச்சபை பிப்ரவரி 2-ஆம் நாளை பரிசுத்த கன்னிமரியாயின் சுத்திகரத் திருநாளாகக் கொண்டாடுகிறது. இந்த திருவிழாவோடு கிறிஸ்மஸ் காலம் நிறைவு பெறுகிறது. இந்தத் திருநாள் சேசுவினுடையவும், மரியாயினுடையவும் திருநாளாகத் திகழ்கின்றது! இது சேசுவின் திருநாள் - எவ்வாறெனில், மோயீசனின் சட்டப்படியே அவர் பிறந்த 40-ஆம் நாளில் அவரது தாயாரால் தேவாலயத்தில் காணிக்கையாக்கப் பட்டார். இது, அர்ச். கன்னிமரியாயின் திருநாளாகவும் திகழ்கின்றது. எப்படி யெனில், அவர்கள் யூதச்சட்டத்தின்படி தன்னையே சுத்திகரச் சடங்கிற்கு கையளிக்கிறார்கள்.

திருச்சபை முதல் தடவையாக தேவாலயத்தினுள்ளே நுழையும் சேசுபாலனைப் பற்றி "இதோ! ஆட்சி செய்பவரான ஆண்டவர், அவருடைய பரிசுத்த ஆலயத்தினுள் வருகிறார்; ஓ, சீயோனே! அகமகிழ்ந்திரு, மகிழ்ச்சிக் கொண்டாடி உனது சர்வேசுவரனை சந்திக்க வருவாயாக" என்று குருக்களின் கட்டளைச் செபத்தில் பாடுகிறது. நாமும், "இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலால் தேவாலயத்திற்கு" (லூக். 2:27) வந்து தேவபாலனை மகிழ்ச்சி நிறைந்தவராக தமது கரங்களில் பெற்றுக்கொண்ட சிமியோனின் பரிசுத்த மனநிலையோடு அவரைச் சந்திக்கச் செல்வோமாக. இன்றைய, இந்தத் திருநிகழ்ச்சியை தகுந்தவிதமாகக் கொண்டாட திருச்சபை மெழுகுதிரிகளை



மந்திரித்து, நமக்குத் தந்து நம்மை தேவாலயத்திற்குப் பவனியாகச் செல்லத் தூண்டுகிறது. எரியும் மெழுகுதிரியானது, நமது ஆன்மாவில் ஒளிர வேண்டிய வரப்பிரசாதத்தினுடையவும், விசுவாசம் நிறைந்த கிறீஸ்தவ வாழ்வுக்கு அடையாளமாகவும் திகழ்கின்றது. அது சிமியோனின் வாக்கின்படி "புறஜாதி களைப் பிரகாசிப்பிக்கிற ஒளியாகவும்", உலகினுடைய ஒளியாகவும் இருக்கின்ற கிறீஸ்துவின் சாயலாகவும் திகழ்கின்றது. (திருச்சபை, இந்த சிமியோனின் பாடலை ஒவ்வொரு இரவு ஜெபத்தின் போதும் தனது குருக்களின் கட்டளைச் செபத்தில் பாடவைக்கிறது). எரிகின்ற திரியானது, நாம் எப்பொழுதும், நமது வாழ்வின் ஊற்றும், விசுவாசத்தினுடையவும், வரப்பிரசாதத்தினுடையவும் காரணமுமா யிருக்கிற கிறீஸ்துவை நம்மில் கொண்டி ருக்க வேண்டுமென்பதை நமக்கு நினை வூட்டுகிறது. சேசு, தமது வரப்பிர சாதத்தால் உயிருள்ள விசுவாசத்தோடும், மேலான சிநேகத்தோடும் நாம் அவரைச் சந்திக்க வேண்டுமென்று ஆசிக்கிறார். அவருடனான நமது சந்திப்பு, அந்நியோன்னியம், அர்ச்சிப்புடையதாக இருப்பதாக.

**" ஓ மரியாயின் மகிமை பொருந்திய தாழ்ச்சியே, அது பரகதியின் வாசலும் மோட்சம் செல்லும் ஏணியுமாயிருக்கிறது. மரியாயின் தாழ்ச்சி என்னும் பரலோக ஏணி வழியாக இறங்கியே சர்வேசுவரன் பூமிக்கு வந்தார் " -** அர்ச். அகுஸ்தினார்

சேசு, தாம் கடவுளாயிருந்தாலும், யூதர் சட்டத்திற்கேற்ப ஏனைய எபிரேய தலைச்சன் குழந்தைகளைப் போல ஒப்புக் கொடுக்கப்பட வேண்டியதில்லை என்றாலும், பரமபிதாவுக்கு ஒப்புக் கொடுக்க எடுத்துச் செல்லப்படுகிறார். உலகின் இரட்சண்யத்திற் காகப் பலியாகவிருக்கும் பலிப்பொருளாக அவர் இருக்கிறார். சொல்லப்போனால், தேவாலயத்தில் அவர் காணிக்கையாக்கப் படுதலே பின்னாளில் கல்வாரியில் தமது உயிரை ஈந்து நிறை வேற்றப்படும் பலியையே குறிக்கிறது. நாமும் அவரோடு சேர்ந்து நம்மையே ஒப்புக்கொடுப்போமாக.

சேசு, தேவாலயத்தில் அவரது பரிசுத்த தாயாரால் காணிக்கையாக்கப்படுகிறார். இங்கு மாதா 'இணை இரட்சகர்' என்ற அவர்களது அந்தஸ்து வெளிப்படுகிறது! தேவமாதா பழைய ஏற்பாட்டுத் தீர்க்கத்தரிசனங்களின் மறைபொருளிலிருந்து, சேசு **உலக இரட்சகர்** என்பதை அறிந்திருந்தார்கள். அவரது அந்த மீட்பின் அலுவல் துன்பமாகிய மறைபொருளின் வழியாகத்தான் நிறைவேற வேண்டும் என்பதையும் அதில் அவரது தாயாராக, தாம் பங்கேற்க இருப்பதையும் மாதா தெளிவாகத் தெரிந்திருந் தார்கள். "உம்முடைய ஆத்துமத்தையும் ஒரு வாள் ஊடுருவும்" என்ற சிமியோனின் தீர்க்கத்தரிசனமும் மரியாயின் இந்தக் கணிப்பை உறுதி செய்தது. அந்த சமயத்தில் "இதோ ஆண்டவருடைய அடிமையானவள், உமது வார்த்தையின்படியே ஆகட்டும்" (லூக். 1:38) என்று, அன்று தாம் கூறியதை, திரும்பவும் சொல்ல வேண்டும் என்பதை தமது இருதயத்தின் ஆழத்தில் இருத்திக் கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் அவர்களது தெய்வீக குமாரனை காணிக்கையாக்கிய போதே, அவரோடு எப்போதுமே ஒன்றித்திருக்கும் தேவதாய் தம்மையும் சேர்த்து பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால், சேசுவை ஒப்புக்கொடுக்க ஆலயத்தினுள் நுழைவதற்கு முன்பாக, மாதா தம்மை சுத்திகரச் சட்டத்திற்கு உட்படுத்த விரும்பினார்கள். தாம் ஒரு கன்னிகையாக இருக்கிறோம் என்பதை அறிந்திருந்தும், கன்னிமரியம்மாள் மற்ற யூதத் தாய்மார்களின் நிலைக்கு தன்னையே தாழ்த்தி ஏழைகளால் வழங்கப்படும் "இரண்டு மாடப்புறாக் குஞ்சுகளை" ஏந்தியவர்களாக அவர்களோடு ஒருவராகக் காத்திருந்தார்கள்.

மோயீசனது நியாயப்பிரமாணத்திற்கு தாங்கள் கட்டுப்பட தேவையில்லையானாலும் சேசுவும், மாதாவும் அதற்கு தங்களையே உட்படுத்திக் கொண்டார்கள். தாழ்ச்சியோடு சர்வேசுவரன் வழங்கியச் சட்டத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். நாம் நமது வாழ்வில் கட்டுப்படவேண்டிய சட்டங்களிலிருந்து (தேவ கட்டளைகள், திருச்சபைக் கட்டளைகள் மற்றும் அரசாங்கச் சட்டங்கள்) அகங்காரத்தினால் தவறான சாக்குப் போக்குகளைச் சொல்லி தவிர்த்துக் கொள்ள முனைகிறோம். அது தவறு. சேசுவினுடை யவும், அர்ச். கன்னிமரியாயினுடையவும் முன்மாதிரிகைகளைப் பின்பற்றி, நம்மையே தாழ்த்தி, நமது உள்ளார்ந்த சுத்திகரத்தின் அவசியத்தை உணர்ந்து, நம்மையே சுத்திகரம் செய்து தேவ கட்டளைகள், இயற்கை விதிகள், திருச்சபைக் கட்டளைகள் மற்றும் நியாயமான அரசாங்கச் சட்டங்கள் (தேவ கட்டளைக்கும், இயற்கை விதிக்கும் புறம்பாக இல்லாத அரசுச்சட்டங்கள்) ஆகியவற்றை தவறாமல் அநுசரிக்க உதவும்படி அவர்களிடம் மன்றாடுவோமாக.

**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை**
**பாளையங்கோட்டை**

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

**விசுவாசிகள் பயனடையும்படியாக இங்கே பிரதான மந்திரங்களுடைய விளக்கங்கள் தரப்படுகின்றன** – (ஆசிரியர்)

## அர்ச்சிஷ்ட சிலுவை மந்திரம்

***அடையாளம்:***

நாம் மெய்யான சர்வேசுவரனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதை காண்பிப்பதற்கு நமக்கு ஒரு விசேஷ அடையாளமுண்டு. அதுதான் சிலுவை அடையாளம்.

***சத்துருக்கள்:***

சேசுநாதர்சுவாமி சிலுவையில் அறையுண்டு மரித்து, நம்மை மீட்டிருக்கிறதினால், உலகம், பசாசு, சரீரம் என்கிற நமது சத்துருக்களைத் துரத்தி, நம்மைக் காப்பாற்றி இரட்சிக்க, அர்ச். சிலுவைக்கு விசேஷமான வல்லமையுண்டு. அப்படியிருக்க நித்திரைக்கு முன்னும் பின்னும், யாதொரு வேலை செய்வதற்கு முன்னும் பின்னும், விசேஷமாய்ச் சோதனை நேரத்திலும், தக்க வணக்கத்தோடும், உயிருள்ள விசுவாசத்தோடும், சிலுவை அடையாளம் வரைகிறது நல்லக் கிறீஸ்தவர்களுக்குரிய வழக்கம்.

***சர்வேசுவரன்:***

சகலத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றி, சர்வத்துக்கும் பரம கர்த்தராயிருக்கிறவரே சர்வேசுவரன். அவர் சரீரமில்லாதவரும், உத்தம ஞான அரூபியும், சகல நன்மை நிறைந்தவருமாயிருக்கிறார்.

***திரியேக சர்வேசுவரன்:*** **(திரி = மூன்று; ஏக = ஒன்று)**

சர்வேசுவரன் தேவ சுபாவத்தில் ஒருவராயிருந்தாலும், ஆள் வகையிலே மூவராயிருக்கிறார். பிதாவும் சர்வேசுவரன், சுதனும் சர்வேசுவரன், இஸ்பிரீத்துசாந்துவும் சர்வேசுவரன். ஆனால் மூவரும் மூன்று சர்வேசுவரன் அல்ல. ஏனென்றால் மூன்று ஆட்களுக்கும் ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே தேவசுபாவம் இருக்கிறது. ஆகையால் மூன்று ஆட்களும் ஒரே சர்வேசுவரன்.

அதனாலேதான் நாம் சிலுவை அடையாளம் வரையும் போது, பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவின் **நாமங்களினாலே என்று சொல்லாமல் நாமத்தினாலே** என்று சொல்லுகிறோம்.

(தொடரும்)

# "வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்"

**(மத். 25:36)**


**(இன்று நவீன திருச்சபையிலே நோயாளிகளைச் சந்திப்பதும், அவஸ்தை வழங்குவதும் அரிதாகி வருகிறது. குருவானவருக்குப் பதிலாக உபதேசியாரை அனுப்பி அவஸ்தை தரும் அவலமும் நடக்கிறது. அப்படியே குருக்கள் சந்திக்கச் சென்றாலும் வியாதியஸ்தர்களுக்கு எந்த விதமான ஞான உதவியும், ஆறுதலும் கிடைக்காதபடிக்கு அவசங்கைக்குத்தான் வழிவகுக்கிறது. எனவே திருச்சபையில் பாரம்பரியமாக வழங்கி வரும் குருவானவரின் வியாதியஸ்தர் விசாரணையின் முறைகளை விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இந்த கட்டுரை உதவும் -** ஆசிரியர்)

பிறர் சிநேக கிரியைகளில் நோயாளிகளைச் சந்தித்து உதவியும் ஆறுதலும் கொடுப்பது முக்கியமானதொன்றாக விளங்குகிறது. நமதாண்டவரே இதில், நமக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். அவர் நோயாளிகளைச் சந்தித்து அவர்களுக்கு ஆரோக்கியமும், ஆறுதலும் அளித்து வந்ததை நாம் சுவிசேஷத்தில் காண்கிறோம்.

சர்வபிரசங்கி ஆகமமும் "வியாதிஸ்தனைச் சந்திக்க அசட்டை செய்யாதே; ஏனெனில் இத்தகுதியான கிரியைகளால் தான் நீ பிறர் சிநேகத்தில் உறுதிபடுவாய்" (சர்வபிரசங்கி. 7:38) என்று அறிவுறுத்தி நம்மைத் தூண்டுகிறது. வியாதியஸ்தர்களைச் சந்தித்து தேற்றுவது ஒவ்வொரு கிறீஸ்தவனுடைய கடமையா யிருக்கிறது. ஆயினும் குருக்களுக்கு இது ஒரு பெரிய கடமையாக உள்ளது. ஏனெனில் குருவானவர் வெறும் மனித ஆறுதலை மட்டும் தருவதில்லை, மாறாக திருச்சபைத் தரும் தெய்வீக ஆறுதலையும் கொண்டு வருகிறார். அதுமட்டுமல்லாது, கருணையே உருவான சர்வேசுவரனாகிய ஆண்டவரையே (திவ்விய நற்கருணை ஆண்டவரை) வழங்குகிறார்.

ஆனால், குருவானவர் 'அனைத்தையும் அறிந்தவராகவோ', 'எங்கும் நிறைந்திருப்பவரோ' அல்ல. எந்த இடத்தில் யார் நோயுற்றிருக்கிறார், யாருக்கு அதிக அவசியமான உதவி தேவைப்படுகிறது என்பதை அவருக்கு அறிவிப்பதும், அந்த நோயாளிகளைக் குருவின் வருகைக்காகத் தயார் செய்வதும் விசுவாசிகளின் கடமையாகும். பாஸ்கு காலங்களில் தேவாலயத்திற்கு வர முடியாதவர்கள், நோயாளிகள், முதியோர்கள் ஆகியோர்களுக்கு தேவையான முன் தயாரிப்பைக் கொடுத்து, திவ்விய நற்கருணையைப் பெறச் செய்வதில் குருவானவருக்கு உதவ விசுவாசிகளுக்கு மிகுந்த கடன் உண்டு.

அவசர காலத்தில் கால தாமதம் செய்யாமல் மருத்துவரை அழைக்கின்ற அதே வேளையில் ஆத்தும மருத்துவரான குருவானவரையும் அழைக்க வேண்டும். உண்மையாகவே உயிருக்கு அபாயம் இருக்கும் பட்சத்தில், அது பகலாயிருந்தாலும் சரி, இரவாயிருந்தாலும் சரி உடனடியாக குருவானவரை அழைக்கத் தயங்கக் கூடாது.



### குருவானவரைச் சந்திக்க நோயாளிகளை தயாரிக்கும் முறைகள்:

குருவானவர் நோயாளியைச் சந்திக்க வரும் போது சில முன்னேற்பாடுகளைக் கவனிக்க வேண்டும். அவை:

- **நோயாளிகளின் ஆத்துமத் தயாரிப்பு:**

நோயாளிகளின் வயது, குண நலன்கள், அவரது பழக்கவழக்கங்கள், உடல் நிலை இவற்றிற்கேற்ப அவருடைய ஆத்துமத்தை தயார் செய்ய வேண்டும். உண்மையான விசுவாச உணர்வுடனும், விவேகத்துடனும், கனிவுடனும் நோயாளியை அணுக வேண்டும். அவரை ஒரு சில சிறிய ஜெபங்களைச் சொல்ல வைத்து நாமும் அவருடன் சேர்ந்து சொல்வது நல்ல பலனை அளிக்கும்.

**"சேசுநாதர் சகல பட்டணங்களிலும் கிராமங்களிலும் சுற்றித் திரிந்து . . . எவ்வித நோயையும் பிணியையும் குணமாக்கிக் கொண்டு வந்தார்"** (மத். 9:35)

◆ **நோயாளி இருக்குமிடத்தை தயார் செய்தல்:**

மெய்யான சர்வேசுவரனும், மெய்யான மனிதனுமானவருமான சேசுகிறீஸ்துநாதர் தாமே அந்த வீட்டில் எழுந்தருளப் போகிறார் என்பதை உணர்ந்து அவரை தக்கவிதமாக சங்கை மரியாதையோடு வரவேற்க வேண்டும். அதற்கு நோயாளி இருக்குமிடத்தை தயார் செய்தல் அவசியம். ஒழுங்கில்லாத அசுத்தமான அறையில் வரவேற்பது அவரை அவமதிப்பதாகும். முடிந்த மட்டிலும் வீட்டு வாசல் மற்றும் வீட்டைச் சுத்தமாக வைத்து, அநாவசியமான பேச்சை, சத்தத்தை நீக்கி (குறிப்பாக டிவி., ரேடியோ போன்றவை களை) அவரை வரவேற்க வேண்டும்.

◆ **பொருட்களைத் தயார் செய்தல்:**

நோயாளி இருக்கும் அறையில் ஒரு சிறிய மேஜையை பீடம் போல் அமைத்து, வெள்ளைத் துணி விரித்து, பாடுபட்ட சுரூபத்தை வைத்து, இரு பக்கங்களிலும் மெழுகுதிரியை ஏற்றி வைக்க வேண்டும். சிறிய கண்ணாடி குவளையில் சுத்தமான தண்ணீர் வைத்திருக்க வேண்டும்.

குருவானவர் வீட்டு வாசலில் வந்தடையும் நேரத்தை முன்பாகவே அறிந்து, அவர் வந்தவுடன் மவுனமாக ஒற்றை முழங்கால் படியிட்டு வரவேற்று, பின்னர் எரியும் மெழுகுதிரியுடன் அவரை நோயாளி இருக்கும் அறைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

குருவானவர், நோயாளி இருக்கும் அறையையும், நோயாளியையும் தீர்த்தத்தால் மந்திரித்தப் பிறகு, நோயாளிக்கு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்ய வாய்ப்பு கொடுக்க வேண்டும். நோயாளி மிகவும் பலவீனமாயிருந்தால் வீட்டிலுள்ள எவரேனும் பாவசங்கீர்த்தன மந்திரத்தைச் சொல்லலாம்.

அவஸ்தைப்பூசுதல் கொடுக்கப்பட வேண்டியிருந்தால் மேஜையில் கூடுதலாக ஒரு சிறிய தட்டில் 5 பஞ்சுருண்டை களையும், ஒரு எலுமிச்சைப் பழத்தை இரண்டாக வெட்டியும் வைத்திருக்க வேண்டும்.

நோயாளி திவ்விய நன்மை வாங்கிய பிறகு நல்ல முறையில் நன்றியறிதல் செய்ய உதவ வேண்டும்.

இப்படியாக, நோயாளிகள், முதுமையினால் ஆலயத்திற்குச் செல்ல இயலாதவர்களுக்கு உதவுவது பெரும் சரீர சம்பந்தமான தர்மசெயல் மட்டுமின்றி அவர்களுடைய ஆத்துமத்துக்குச் செய்யும் பேருதவியுமாகும். இது திருச்சபைக்கும், குருக்களுக்கும் செய்யும் உன்னதமான காரியமாகும். அதனால் தீர்வை நாளில் நமதாண்டவரும் "இவர்களுக்கு செய்த போதெல்லாம் நீங்கள் எனக்கே செய்தீர்கள்" என்று திருவுளம்பற்றி, மோட்ச சன்மானம் வழங்குவார்.

✝

**R I P**

**கோட்டார் மேற்றிராசன ஆயர் வந்திக்க தக்க லியோன் A. தர்மராஜ் ஆண்டகை அவர்கள் 15.1.2007 அன்று நன்மரணம் அடைந்தார்கள். அவர்களின் மறைவிற்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆண்டகை அவர்களின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியை அடைய வேண்டிக் கொள்வோம்.**

◆◆◆◆◆

**கடந்த 20 ஆண்டுகளாக அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் இங்கிலாந்து மாகாணத்தில் ஆத்தும இரட்சண்ய அலுவலில் ஈடுபட்டு வந்த சங். மைக்கேல் கிரௌடி சுவாமிகள்** (Rev. Fr. Michael Crowdy) **தமது 92-வது வயதில் 2006-ஆம் ஆண்டு அமலோற்பவ மாதா திருநாளன்று, திருச்சபையின் தேவதிரவிய அனுமானங்களினால் திடம் பெற்று பாக்கியமான மரணம் அடைந்தார்கள். சுவாமியவர்களின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியடைய ஜெபிப்போமாக.**

## பாவம் செய்வதை விட சாவதே மேல்!

**அர்ச். ரீத்தம்மாளின் கணவன் விரோதிகளால் கொல்லப்பட்டான். அவர்களைப் பழிவாங்கத் துடித்த தன் இரு மகன்களைத் தடுத்தும் அவர்கள் பிடிவாதமாக இருப்பதைக் கண்ட ரீத்தம்மாள் வருந்தி "கொலை செய்து சாவானப் பாவம் கட்டிக் கொண்டு அவர்கள் நரகத்திற்கு செல்வதை விட இப்போதே சாகும்படி கிருபை செய்யும்" என்று சர்வேசுவரனை மன்றாடினாள். அவளது ஜெபம் கேட்கப்பட்டது. ஆம்! அவளது இரு மகன்களும் திடீரென நோய்வாய்ப்பட்டு, மனந்திரும்பி பாக்கியமாக மரித்தார்கள்.**



# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!

["மோட்சத்திற்கு இப்பக்கம் அழகில் சிறந்தது திரிதெந்தீன் பலிபூசையே" என்று போற்றுகிறார் திருச்சபையின் தலைசிறந்த ஞான ஆசிரியரான சங். ஃபேபர் சுவாமி. பல நூற்றாண்டுகளாக திருச்சபையை வளப்படுத்தி, உலகத்தை அர்ச்சித்து வந்த மெய்யான கல்வாரிப்பலி திரிதெந்தீன் திவ்விய பலிபூசையே! அதன் ஒவ்வொரு பகுதியையும் தெளிவாக அறிந்து கொள்வது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். இத்தொடரை வாசகர்கள் புரிந்து, தெளிந்து பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம் – ஆசிரியர்]

### முதல் பாகம் : ஆயத்தப் பூசை

### போதனைப்பகுதி

### (ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக போதனை கேட்போரின் பாகம்)


திரிதெந்தீன் திவ்விய பலிபூசையின் முதல் பகுதியான ஆயத்தப் பூசை - போதனைப் பகுதியில் ஞானஸ்நானம் பெற ஆயத்தம் செய்வோர் பங்குபெறுவர். ஏனெனில் இந்தப் பகுதியில் தான் அவர்கள் விசுவசிப்பதற்கானப் போதனைகள் ஜெபங்கள், நிருபம் மற்றும் சுவிசேஷம் வழியாகக் கொடுக்கப்படுகின்றன. அவை, அவர்கள் பெறவிருக்கும் ஞானஸ்நானத்திற்கு ஒரு சிறந்த தயாரிப்பாக இருக்கும். ஆகையால் தான், இப்பகுதி **ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக போதனைக் கேட்போரின் பாகம்** என்று அழைக்கப்படுகிறது. இருப்பினும் ஞானஸ்நானம் பெற்றவர்களும், பாவத்தை விலக்கி, புண்ணிய வாழ்வு வாழ தேவையான அறிவுரைகளையும், விசுவாசத்தில் உறுதியடையப் போதனைகளையும் இப்பகுதியிலிருந்து பெற்றுக் கொள்வார்கள்.

### பூசை ஆரம்பம்

பூசை உடுப்புகளை அணிந்து கொண்டு குருவானவர் பூசைப் பாத்திரங்களைக் கையிலேந்திய வண்ணம் பீடத்திற்கு வருகிறார். 'ஓரேப்' மலையில் தன் ஒரே மகன் ஈசாக்கை பலியிடச் சென்ற ஆபிரகாமின் சிந்தையுடன், "கல்வாரி மலை மீது பலியான சேசுவையே, பலியாகத் தர வந்தோம், ஏற்றருள்வீர் ஆண்டவரே!" என்னும் பொருள்பட (பாடற் பூசையில்) வருகைப் பல்லவி பாடப்படும்.

சேசுநாதர் சுவாமியின் பிரதிநிதியாக வரும் குருவானவருக்கு மரியாதை காண்பிக்கும் அடையாளமாக விசுவாசிகள் எழுந்து நிற்கின்றனர். குருவானவர் பீடத்தின் நடுவில் வந்ததும் பீட பரிசாரகருடன் தேவநற்கருணைக்கு ஒற்றை முழங்காலிட்டு ஆராதனை செலுத்துகிறார். பின்னர், குரு படிகளில் ஏறிச் சென்று பலிபூசைக்கு பீடத்தை ஆயத்தப்படுத்துகிறார். பூசைப் பாத்திரத்தை பீடத்தின் நடுவில் மிக பூசிதமாகத் துகிலால் மூடி வைத்துவிட்டு, பீடத்தின் இடது ஓரத்தில் (நிருபம் பக்கம்) சென்று பூசைப் புத்தகத்தில் அன்றையப் பூசைச் செபங்களைத் தெரிவு செய்கிறார்.

பின்னர், பீடத்தினடியில் இறங்கி வந்து பரிசாரகருடன் சேர்ந்து பூசையின் சாதாரணப் பாகத்தின் (Ordinary of the Mass) செபங்களை ஆரம்பிக்கிறார். விசுவாசிகள் அனைவரும் முழந்தாள்படியிட்டு அச்செபத்தில் கலந்து கொள்வர்.



பூசை பாத்திரத்தோடு குருவானவர் பீடம் நோக்கி வருகிறார்

## பூசை ஆரம்பச் செபம்

**– பீடத்தினடியில் ஆயத்த செபங்கள் –**

(Prayers at the foot of the Altar)



**குருவானவர் தம்மீது சிலுவை அடையாளம் வரைகிறார்**

பீடத்தின் படிகளில் இறங்கி வரும் குருவானவர், பாவத்தால் வீழ்ச்சியடைந்து சிங்காரத்தோப்பிலிருந்து விரட்டப்பட்ட மனிதனின் பிரதிநிதியாக பீடத்தினடியில் வந்து நிற்கிறார். அங்கே, அவர் தொடங்குகிற செபங்கள் - மிகவும் பரிசுத்தமான தேவ சமூகத்தில் நிற்கும் தமது தாழ்ந்த நிலையை - தமது தகுதியின்மையை உணர்ந்து தம்மைத் தூய்மைப்படுத்தி நிறைவேற்றப் போகும் பலிக்கு தகுதியாக்கும்படி தேவ சமூகத்தை மன்றாடும் விதமாகவும் இருக்கின்றன. மேலும் பழைய ஏற்பாட்டில் மனுக்குலத்திற்கு வாக்களிக்கப்பட்ட இரட்சகரை ஆவலோடும், நம்பிக்கையோடும் எதிர்பார்த்திருந்த இஸ்ராயேல் மக்கள் எழுப்பிய ஏக்கத்தின் குரலாய் எதிரொலிக்கின்றன.

முதலில், அர்ச். தமத்திரித்துவத்தின் மீதும், நமதாண்டவரின் பாடுகளின் மீதும் பாவமன்னிப்பின் மீதும் தாம் கொண்டிருக்கும் விசுவாசத்தை சுருக்கமாக அறிக்கையிடும் வண்ணமாக குருவானவரும், விசுவாசிகளின் சார்பாக பீட பரிசாரகரும் தம்மீது சிலுவை அடையாளம் வரைந்து கொண்டு ✠ "In nominie patris . . . **பிதாவினுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினாலே ஆமென்**'' என்ற தமதிரித்துவ தோத்திர செபம் சொல்கிறார். இந்த செபத்தாலும், வரைந்த சிலுவை அடையாளத்தாலும் தன்னையே சுத்திகரித்துக் கொண்டு தீயவனின் கண்ணியிலிருந்து பாதுகாக்கப்பட்ட குரு தமது இரு கரங்களையும் சேர்த்துக் கொண்டு வணங்கியவாறு சர்வேசுவரனின் பரிசுத்தப் பீடத்தினின்று பலி செலுத்தும் தமது புனிதமான அலுவலால் நற்கருணை ஆண்டவரோடு ஒன்றித்து உள்ளரங்க ஜீவியத்தில் திடமடையும் தமது மகிழ்ச்சியையும், ஆவலையும் வெளிப்படுத்த 42-ஆம் சங்கீதத்தின் வாக்கியமான: "Introibo ad altare Dei . . . **சர்வேசுவரனுடைய பீடத்தின் முன் பிரவேசிப்பேன்**'' என்ற ஆரம்ப வசனத்தைச் (Antiphon) சொல்லி செபிக்கிறார். அவரைத் தொடர்ந்து, பரிசுத்த ஆவியானவரின் வரப்பிரசாதத்தால் அடையவிருக்கும் 'புதிய', சுபாவத்துக்கு மேலான வாழ்வையும், திவ்விய பலியினால் போஷிக்கப்பட்டு பெறவிருக்கும் இளமைக் குன்றாத வரப்பிரசாத வாழ்வையும் சுட்டிக்காட்டும்படியாக "Ad Deum qui laetificat . . . **எனது வாலிபத்தை மகிழ்விக்கும் சர்வேசுவரனிடத்தில் பிரவேசிப்பேன்**'' என்ற பதில் வசனம் செபமாக பீட பரிசாரகரால் சொல்லப்படுகிறது.

(தொடரும்)

# தபசு காலத்தின் வருகை

**தவக்காலத்தின் முதல் நாளான சாம்பல் புதனன்று, "நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதி. 3:19) என்ற பரமபிதாவின் சாபத்தை நினைப்பூட்டி, எச்சரித்து நம்மை சர்வேசுவரனிடம் மனந்திரும்ப அழைக்கிறது திருச்சபை. நமது நெற்றியில் "சாம்பலை" பூசி நமது நிலையற்ற வாழ்வை உணர்த்தி நமது பாவங்களுக்கு பரிகாரமாக தவம் செய்ய நம்மைத் தூண்டுகிறது.**

**தவக்காலத்தை தகுந்த முறையில் அனுசரிக்க தாய்த் திருச்சபை அதன் தயாரிப்பாக மூன்று ஞாயிறுகளை - வாரங்களைத் திட்டம் செய்துள்ளது. அதாவது பாஸ்காத் திருநாளுக்கு முன் வரும் 70-வது நாளின் வாரம் சப்தரிகை ஞாயிறு (Septuagesima sunday) எனவும், 60-வது நாளின் வாரம் சடிகை ஞாயிறு (Sexagesimasunday) எனவும், 50-வது நாளின் வாரத்தை பஞ்சிகை**(Quinquagesima sunday) **என்றும் பிரித்து, நம்மை தவமேவிய உணர்வுடன் தவக்காலத்தை எதிர்நோக்கி நமது பாவங்களுக்காக ஜெப தபங்களில் ஈடுபட்டு தேவ இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்றுக்கொள்ள நமக்கு படிப்பிக்கிறது திருச்சபை.**

**திருச்சபையின் உண்மையான மக்களாகிய நாம் அது தவக்காலங்களில் கேட்கும் ஜெபதபங்களை மகிழ்வோடும், விசுவாசத்தோடும், பரிகார உணர்வோடும் செய்து உலகிற்கும், திருச்சபைக்கும் தேவ இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்றுத் தந்து உலகில் உயிர்த்த சேசுவின் இராஜரீகம் மலரச் செய்வோமாக!**

## அர்ச். அருளானந்தர் வழங்கிய மந்திரித்த சாம்பல்!

**அர்ச். அருளானந்தர், சாம்பல் புதனன்று மந்திரிக்கப்படும் சாம்பலை பேய்களை விரட்டவும், நோய்களைப் போக்கவும் பயன்படுத்தினார். ஒரு முறை மாத்தூர் என்ற ஊரில் பிராமணப் பெண்ணொருத்தி அசுத்த ஆவியால் துன்புற்றாள். அருளானந்தர் சுவாமியை பற்றிக் கேள்விப்பட்ட அவள் தமக்கும் கொஞ்சம் சாம்பல் கொடுத்து அனுப்பும்படி கேட்டுக்கொண்டாள். தாம் குணமடைந்தால் அவர் போதிக்கும் கிறீஸ்தவ மதத்தில் சேர்வதாக வாக்களித்தாள். அதன்படியே அர்ச். அருளானந்தர் கொடுத்தனுப்பிய சாம்பலால் அந்த பெண்மணி பேயின் பிடியிலிருந்து விடுபட்டாள்! இந்த சம்பவத்தை அர்ச். அருளானந்தரே 1677-ஆம் ஆண்டு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரைத் தொடர் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் உள்ள மாகாணத்தைச் சேர்ந்த அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் குருவானவர் ஒருவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பான ***"The Ideal of the Catholic Family"*** என்ற சிறு நூலின் தமிழாக்கமாகும்.)

முதல் உரை: **கத்தோலிக்க இல்லம்** (தொடர்ச்சி)

## கிறீஸ்தவப் பண்பு

டாம் கெளரான்கர் (Dom Gueranger) அவரது **"திருவழிபாட்டு ஆண்டு"** என்ற நூலில் மூன்று இராஜாக்களின் திருநாளுக்கு தயாரிப்பதற்காக, குடும்பங்களின் பழக்க வழக்கங்களை விவரிக்கும் போது, இத்தகையவைகள் நமது முன்னோர்களின் விசுவாசத்திற்கு எளிய விதமாகத் திரும்புதலுக்கு உதவுகின்றன என்று கூறுகிறார். அவர் நமது வேதத்தின் பரிசுத்தமான காரியங்கள், நிகழ்ச்சிகளோடு, குடும்ப சந்தோஷத்தின் அவசியத்தையும் ஆணித்தரமாகக் கூறுகிறார். இத்தகைய அழகிய பாரம்பரியமான பழக்கங்கள் மீண்டும் குடும்பங்களில் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்வோமாக. திருச்சபையும் கூட, கத்தோலிக்க நாடுகளில் திருநாட்களை விசுவாச உணர்வோடு கொண்டாட, மிக அற்புதமான இராகங்கள், பாடல்கள், உணவு தயாரிக்கும் முறைகள், கதைகள் மற்றும் விளையாட்டுகளைக் கொண்டாடத் தூண்டுகிறது. இவைகளைத் தவிர குழந்தைகள் தங்களது விசுவாசத்தை நேசிக்கச் செய்ய சிறந்த வழிகளை நான் அறியவில்லை. இதன் மூலம் அவர்கள் திருச்சபை ஒரு நல்ல தாய் என்பதையும், அதனுடைய குழந்தைகளான நமது மகிழ்ச்சியைத் தான் திருச்சபை தேடுகிறது - ஆசிக்கிறது என்பதையும் உணர முடிகிறது.



இப்போது, நமது பாரம்பரியக் கத்தோலிக்கர்களிடையே அடிக்கடி தாராளமாகக் காணப்படும் ஒரு குறையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது என்னவென்றால் - இயல்பான நியதியை புறக்கணிப்பதே அது! அர்ச். தாமஸ் அக்குவீனாஸ், "வரப்பிரசாதம் இயல்பை அகற்றுவதில்லை, மாறாக அதனை உத்தமமாக்குகிறது" என்று போதிக்கிறார். இதற்கு என்ன பொருள் என்றால், பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் ஆன்மாவில் சுபாவத்துக்கு மேலான புண்ணியங்களை (விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம், ஒழுக்க நன்னடத்தை) மட்டுமல்லாமல் சுபாவத்துக் கடுத்த இயல்பான புண்ணியங்களிலும் (பண்பாடு, நேர்மை, விடாமுயற்சி போன்றவை) வளரச் செய்வதைக் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, நான் கோடிட்டுக் காட்ட விரும்புவது, அறிவு உருவாக்கத்தின் அவசியத்தையே! உள்ளார்ந்த ஞான ஜீவியத்தின் விதைகள் இயல்பான, முழுமையான உள்ளத்தில் தான் சிறப்பாக வளரும் என்பது நிச்சயம். இதனைச் சில உதாரணங்கள் மூலம் சற்று தெளிவுப் படுத்துகிறேன். இளம்பருவத்திலுள்ள உங்கள் பிள்ளைகள், அவர்கள் சிறு குழந்தைகளாக இருக்கும் போது சிறு, சிறு பக்தி இராகங்களையும், ஞானப்பாடல்களையும் பாடப் பழகாதிருக்கும் பட்சத்தில், அவர்கள் தேவாலயத்தில் தேவ வழிபாட்டுக் கீதங்களையும், இராகங்களையும் (குறிப்பாக உயிர்ப்பு திருவிழிப்புச் சடங்கில் பாடப்படும் உயிர்ப்பு அறிவிப்பு பாடலை) ஏற்றுப் பக்தியோடு பாட வேண்டும் என்று நீங்கள் எப்படி எதிர் பார்க்க முடியும்? அவர்கள் சிறுவர்களாக இருக்கும் போது, எளிய பாடல்களை ஒரு போதும் பாடியது இல்லையென்றால், அவர்கள் கிரகோரியன் இராகங்களை தேவாலயத்தில் பாடவும் அதில் துய்க்கவும் வேண்டுமென்று நீங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்? அவர்கள் முதன் முதலில் வாசிக்கத் துவங்கும் சமயத்தில் நல்லப் புத்தகங்களையும், சிறுவர் கதைகளையும் படிக்கவில்லை யானால், அவர்கள் எப்படி அர்ச்சிஷ்டவர் களின் வாழ்க்கை வரலாறு களை வாசிக்க முடியும்? சிறந்த கத்தோலிக்க எழுத்தாளரான சார்லஸ் 'பேகேய்' என்பவர் கூறுவது போல". . .விசுவாசத்திற்கும் கலாச்சாரத்திற்குமிடையே எந்த எதிர்ப்புக்கான வாய்ப்பும் இல்லை. ஆனால் அவற்றை நல்ல முறையில் பரிச்சயம் செய்வதில் தான் இந்த எதிர்ப்புகள் உள்ளன. . ." என்று கூறுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதாயிருந்தால், கிறீஸ்தவக் கலாச்சாரம், பண்பு ஆன்மாவின் உணர்வுகளைச் செம்மைப்படுத்துகிறது. ஞான வாழ்வின் மலர்ச்சிக்குத் தேவையான சிறந்த சூழ்நிலைகளை உருவாக்கித் தருகிறது. மீண்டும் ஒருமுறைச் சொல்கிறேன்: அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாளின் குடும்பத்தின் கதையை வாசித்தீர்களானால், எப்படி அவளது பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் கல்விக்கும், அவர்கள் கதைகள், கவிதைகள், பாடல்கள் எழுதுவதிலும், படங்கள் வரைவதிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று ஆசித்தார்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளோடு விளையாடுவார்கள், அவர்களது விளையாட்டுக்களில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். ஆம்! இந்த உண்மையை மீண்டும், மீண்டும் உணர வேண்டும். பாரம்பரியக் கத்தோலிக்கராக இருப்பது லத்தீன் பூசைக்குச் செல்வது மட்டுமே அல்ல, மாறாக முழுமையான கத்தோலிக்க வாழ்வையும் கொண்டிருப்பதேயாகும்.

(தொடரும்)

# செய்திகள்

## லத்தீன் மொழிக்கு கர்தினால் ஆண்டகையின் ஆதரவு!

கடந்த நவம்பர் மாதம், அமெரிக்காவில் செயின்ட் லூயிஸ் நகரில் இருக்கும் “ Gateway Liturgical Conference” என்ற அமைப்பின் உறுப்பினர்களுக்கு கர்தினால் **அரின்ஸ்** (Arinze) ஆண்டகை “ரோமை வழிபாட்டில் லத்தீன் மொழியும் பிராந்திய மொழியும்” என்ற தலைப்பில் உரையாற்றினார். அதில் லத்தீன் மொழியை ஆதரித்துப் பேசினார்.

**அவர் கூறியக் கருத்துக்கள்:**

- ❖ லத்தீன் மொழி அழகும், மேன்மையும் நிறைந்த நல்ல திருவழிபாட்டிற்கு உதவுகிறது.
- ❖ உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரப்பூர்வமான மொழி லத்தீன் தான்.
- ❖ விசுவாசிகளுக்கு லத்தீன் மொழி தெரியாவிட்டாலும் பூசையில் ஒரு சில எளிய பதில்களையேனும் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.
- ❖ கத். திருச்சபைக்கு சரியான, பொருத்தமான மொழி லத்தீனே.
- ❖ திருச்சபையின் அனைத்து இன, மொழி, கலாச்சாரத்தைச் சேர்ந்த மக்களும் இணைந்திருக்க லத்தீன் மொழி அவசியம்.
- ❖ இதர மொழிகளைப் போன்று காலத்திற்கேற்ப மாறும் தன்மையுடையதல்ல லத்தீன் மொழி.

- Fides செய்தி நிறுவனம்.

## அதிகரித்து வரும் பாரம்பரியத் தேவ அழைத்தல்கள்!

- அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் அமெரிக்காவிலுள்ள அர்ச். தாமஸ் அக்குவினாஸ் குருமடத்தில் 2006-2007 கல்வியாண்டில் முதலாமாண்டு பயிற்சியில் 25 குருமாணவர்கள் சேர்ந்துள்ளார்கள்.
- பிரான்ஸ் நாட்டிலுள்ள அர்ச். கூரேதார்ஸ் குருமடத்தில் 20 பேர் சேர்ந்துள்ளார்கள்.
- பாரம்பரியத் துறவற சபைகளில் தற்போது 8 இந்தியர்கள் இருக்கிறார்கள்.

**- இவர்கள் தங்களின் தேவ அழைத்தலில் உறுதியடைய ஜெபிப்போம்.**

## லூர்து திருத்தலத்தில் பாரம்பரிய திவ்விய பலிபூசை!

கடந்த அக்டோபர் மாதத்தில் பிரான்ஸ் நாட்டு லூர்து மாதா திருத்தலத்திற்கு 9000 பாரம்பரியக் கத்தோலிக்கக் கிறீஸ்தவர்கள் திருயாத்திரையாகச் சென்றார்கள். பசிலிக்காவின் கீழ்தள ஆலயத்தில் லத்தீன் பாரம்பரிய திவ்விய பலிபூசை நடைபெற்றது!

**- இதனை மற்ற திருத்தலங்களின் பொறுப்பாளர்கள் பின்பற்றுவார்களாக.**

### புதிய தேவாலய அர்ச்சிப்பு பற்றிய அறிவிப்பு



**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் சார்பாக நாகர்கோவிலில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அர்ச். தோமையார் தேவாலயத்தின் அர்ச்சிப்பு வருகிற மார்ச் மாதம் 3-ஆம் நாளன்று நடைபெறும். அதைத் தொடர்ந்து நடைபெறும் ஆடம்பர திவ்விய பாடல் பலிபூசையில் பங்கேற்க பாரம்பரிய கத்தோலிக்கக் கிறீஸ்தவர்கள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.**

**இந்த சிறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று சர்வேசுவரனுக்கு நன்றி செலுத்தி, தேவ ஆசீர் பெற வருமாறு அழைக்கின்றோம்.**

உங்களது சந்தா மற்றும் கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

Society of St. Pius X
#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com

**“எல்லா ஆபத்துக்களிலும், துன்பங்களிலும், சந்தேகங்களிலும் ஓ மரியாயே ! நான் உம்மையே எப்போதும் நினைப்பேன். உம்மையே அபயமிட்டு அழைப்பேன். ஓ கன்னிமரியாயே, உமது பரிசுத்த நாமம் எப்போதும் எனது உதடுகளில் இருப்பதாக!”**

*—அர்ச். பெர்னார்டு*